SRI S. M. ANNAMALAI : 1905-ல் இத்திட்டத்திற்கு போட்ட மதிப்பீடு எவ்வளவு ? 1929-லே இந்தத் திட்டத்திற்கு போட்ட மதிப்பீடு எவ்வளவு ? இப்போது எவ்வளவு மதிப்பீடு போட்டால், அந்தத் திட்டம் நிறைவேறும் என்று சர்க்கார் கருதுகிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : நான் விடை சொல்லும்போது, இப்போது இது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இனிமேல் அதைப்பார்த்துத்தான் சொல்ல முடியுமே தவிர, முன்னதாகச் சொல்லிவிட முடியாது.

Flood bank (the Manimutha river)

* 1826 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. Selvaraj) : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுக்காவில் கச்சிபெருமாநத்தம் கிராமத்திலிருந்து மணிமுத்து நதிக்கரைக்கு பரவளூர், விருத்தாசலம், சாவடிக்குப்பம் எல்லைவரையில் வெள்ளத்தடுப்புக்காக ஒரு திட்டம் தயாரித்தது உண்டா ?

(இ) அதற்காக செலவிட உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு ?

(உ) இந்த வேலை எப்போது துவங்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) About Rs. 5 lakhs.

(*c*) The work will be taken up after detailed investigation has been completed and plans and estimates have been prepared and sanctioned.

SRI K. B. S. MANI : ஸார், இம்மாதிரி கொள்ளிடம், காவேரி கரைகளுக்கும் சர்க்கார் கரைகள் போட்டு வெள்ளத்தை தடுப்பதற்காக கரைகளைப் பலப்படுத்துவதற்கு என்று தனியாக ஒரு செக்ஷன் துவங்கி வேலை செய்வது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்களே, அவர்கள் நிரந்தரமாக எப்போது இந்த வேலையைத் துவங்க இருக்கிறார்கள் ? அதற்கு சர்க்கார் எப்போது உத்தரவிடும் ?

THE HON. SRI P. KAKKAN : நான் ஏற்கனவே இந்தச் சபையில் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து கனம் அங்கத்தினர் தெரிந்து கொண்டிருக்கலாம். அதற்காக சூபரின்டெண்ட்டிங் என்ஜினியர் விசேஷமாக நியமிக்கப்பட்டு, பல அதிகாரிகள் அவரின்கீழ் நியமித்து வேலை செய்யும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. வெகு சீக்கிரத்தில் அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்காக அதற்கான ஸ்டாப் சாங்ஷன் செய்யப்பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

Corporation of Madras (loans and subsidy for repairs to roads)

* 1827 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRIMATHI T. N. ANANDANAYAKI) : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசினர் அளித்த கடன் அல்லது மானியத்திலிருந்து சென்னை மாநகராட்சி மன்றத்தார் 3 மைல் தூர சாலையைச் செப்பனிடுவதற்காக சுமார் 28 லட்சம் ரூபாய் செலவிட்டுள்ளனர் என்ற உண்மை அரசினருக்குத் தெரியுமா ?